# 27-01-2025 செய்தி

## குடியரசு தினம், சுதந்திர தினத்தில் தேசியக் கொடி: சில உண்மைகள்

- 1950-ஆம் ஆண்டு ஜனவரி 26-ஆம் தேதி, இந்தியா தனக்கென ஓர் அரசமைப்புச் சட்டத்தை ஏற்றுக் கொண்டதை, குறிக்கும் வகையில், குடியரசு தினம் கொண்டாடப்படுகிறது.
- இந்த கொண்டாட்டத்தின் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் தேசிய மூவர்ணக் கொடியை கொடிக் கம்பத்தில் பறக்கச் செய்வதாகும்.
- ஆனால், குடியரசு தினத்திலும் சுதந்திர தினத்திலும் தேசிய கொடியைப் பறக்கவிடுவதில் வெவ்வேறான நடைமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன.
- ஆகஸ்ட் 15-இல் கொண்டாடப்படும் சுதந்திர தின விழாவில், தேசிய கொடி கொடிக் கம்பத்தின் மத்திய பகுதியில் கயிற்றால் சுற்றப்பட்டிருக்கும்.
- அதை அவிழ்த்து கம்பத்தின் உச்சியில் தேசியக் கொடி பறக்கும் வகையில் ஏற்றப்படுகிறது.
- இது காலனித்துவ ஆட்சியிலிருந்து இந்தியா விடுதலை பெற்றதையும், சுதந்திரத்துக்காகப் போராடியவர்களை கௌரவிப்பதையும் குறிக்கிறது.
- இது 'கொடி ஏற்றுதல்' (ஆங்கிலத்தில் ஃபிளாக் ஹாய்ஸ் டிங்) என அழைக்கப்படுகிறது.
- சுதந்திர நாளில் தில்லி செங்கோட்டையில் பிரதமர் கொடியை ஏற்றி வைப்பார்.
- குடியரசு தினத்தில் கம்பத்தின் உச்சியில் கட்டப்பட்ட தேசிய கொடி, கயிறுகள் விலக்கப்பட்டு விரித்துப் பறக்க விடப்படும்.
- நாடு சுதந்திரம் அடைந்த சமயத்தில் அரசமைப்புச் சட்டம் இயற்றப்படவில்லை.அது குடியரசு தினத்தில் நடைமுறைக்கு வந்தது.
- எனவே, ஏற்கெனவே சுதந்திரம் அடைந்த இந்தியா இறையாண்மை மற்றும் ஜனநாயகம் தழைத்த குடியரசாக இருப்பதை கொண்டாடும் தொடக்கமாக கொடிக் கம்பத்தின் உச்சியில் கட்டப்பட்டுள்ள மூவர்ணக்கொடி விரித்துப் பறக்கவிடப்படுகிறது.
- இந்த நிகழ்ச்சி குடியரசுத் தலைவரால் மேற்கொள்ளப்படுகிறது. இது கொடி 'விரித்துப் பறத்தல்' (ஆங்கிலத்தில் ஃபிளாக் அன்ஃபாலிங்) என அழைக்கப்படுகிறது.

## உத்தரகண்டில் இன்று அமலாகிறது பொது சிவில் சட்டம் !

- சுதந்திர இந்தியாவில் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்தும் முதல் மாநிலம் உத்தரகண்ட்.
- உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி ரஞ்சனா பிரகாஷ் தேசாய் தலைமையில் நிபுணர் குழு அமைக்கப்பட்டது.
- உத்தரகண்டில் பழங்குடியினர் தவிர்த்து பிற மக்கள் அனைவருக்கும் பொது சிவில் சட்டம் பொருந்தும். இச்சட்டத்தின்படி, திருமணப் பதிவு மட்டுமின்றி திருமணம் செய்யாமல் சேர்ந்து வாழ்வோரும் அரசிடம் முறையாகப் பதிவு செய்து கொள்வது கட்டாயமாகும். இணையவழியில் இப்பதிவை மேற்கொள்ள முடியும்.
- விவாகாரத்துக்கான காரணங்கள், மறுமணம், ஜீவனாம்சம் தொடர்பாக பொது விதிமுறைகளை உறுதிசெய்யும் இச்சட்டம், பலதார மணம் மற்றும் ஹலாலா நடைமுறையை தடை செய்கிறது.
- பாலின சமத்துவத்தை முக்கிய அம்சமாக கொண்ட இச்சட்டம், ஆண்கள் - பெண்களுக்கு ஒரே போன்ற குறைந்தபட்ச திருமண வயது, ஆண் - பெண் குழந்தைகளுக்கு சமமான சொத்துரிமையை உறுதி செய்கிறது.
- செல்லுபடியாகாத திருமணத்தில் பிறந்த குழந்தைகளையும் சட்ட பூர்வ வாரிசாக கருத வழிவகை செய்வதோடு, உயில் தயாரிப்பு நடைமுறைகளையும் எளிதாக்குகிறது.